

சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் (10.6.2024), தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் திறந்து வைக்கப்பட்டுள்ள "காலம் உள்ளவரை கலைஞர்" என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நவீன கண்காட்சியகத்தை திராவிட முன்னேற்ற கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (10.6.2024) சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு திறந்து வைக்கப்பட்டுள்ள "காலம் உள்ளவரை கலைஞர்" என்ற நவீன கண்காட்சியகத்தை பார்வையிட்டார். உடன் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் வெற்றி அழகன், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் எஸ்.ஜோயல் ஆகியோர் உள்ளனர்.









நாடாளுமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான 'இந்தியா' கூட்டணி சார்பில் போட்டியிட்டு, முத்தமிழறிஞர் கலைஞரின் உடன்பிறப்புகளாய் மக்களின் நம்பிக்கையைப் பெற்று, மக்களவையை கொள்கை உரைகளால் வெல்லப்போகும் தங்க தமிழ்ச்செல்வன், க. செல்வம், தமிழச்சி தங்க பாண்டியன், கலாநிதி வீராசாமி ஆகியோர் கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.









2024 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு & புதுச்சேரியில் 'இந்தியா' கூட்டணியின் நாற்பதுக்கு நாற்பது என்ற மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக குரலெழுப்பப் போகும் மக்களவை உறுப்பினர்கள் டி.எம். செல்வகணபதி, கே.நவாஸ் கனி, துரை வைகோ, கே.இ.பிரகாஷ் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



கன்னியாகுமரி மாவட்டம், உண்ணாமலைக்கடை பேரூராட்சி துணைத் தலைவர் பா.செல்வின் அவர்களுடைய சகோதரர் ப்ரபின் – த.பி.புரூனிகா இணையரின் திருமணத்தை குறிஞ்சி இல்லத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து, இல்லற வாழ்வில் இணைந்துள்ள மணமக்கள் இருவரும் கழகத் தலைவரும் – உழைப்பும் போல; திராவிட மாடலும் – தமிழ்நாடும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார். உடன் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, 9.6.2024 அன்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் திறந்து வைக்கப்பட்டுள்ள "காலம் உள்ளவரை கலைஞர்" நவீன தமிழகத்தின் சிற்பிக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க நவீன கண்காட்சியகத்தை வே.சபரீசன் நேரில் சென்று பார்வையிட்டார்.